# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1973 - 2016 ජූනි මස 24 වැනි සිකුරාදා - 2016.06.24

*1973 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1086 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1089 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***– மத்தியஸ்த சபை (திருத்தம்) சட்டமூலம் 2016, மே 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூலை மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## பொல்கஹவெல பிரதேச சபை

பொல்கஹவெல பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படுகின்ற அட்டவணையில் காணப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்காக பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தர வதிவாளர்களிடத்திலிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவி களின் எண் ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (அ.நி.சு. 6/2006 IV) படி | கல்வி மற்றும் தொழில்சார் தகைமை |
|---|---|---|---|---|---|
| 03 | வேலை/ துறைசார் தொழிலாளர் | தேர்ச்சி அற்ற III | 02 | ரூ. 24,250 -10 X 250 - 10 X 270 -10 X 300 - 12 X 330 -(PL10 2016A) மூன்றாவது சம்பள திட்டத்திற்கு முன் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | **கல்வித் தகைமை**<br>1. கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத)<br>2. 2008.11.19 ஆந் திகதிக்கு தேர்ச்சி அற்ற பதவியில் அமைய/ தற்காலிக/ ஒப்பந்த முறையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது காணப்பட்ட ஆட்சேர்ப்பு சட்ட திட்டத்தின்படி கல்வித்தகைமை உடையதாகும். |

2. **வேறு தேவையான தகுதிகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கை குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(ii) நல்லொழுக்கமும் ஆரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரி, விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசித்திகதிக்கு 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் பொல்கஹவெல அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (பதிவினை கிராம சேவை உத்தியோகத்தரினால் வெளியிடப்படும் சான்றிதழ் மூலம் உரிய பிரதேச செயலாளரினால் பிரதி கையொப்பமிடப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்).

(iv) விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசி திகதிக்கு வயது 18க்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருக்கும் நிரந்தர சேவையாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது) ;

(v) தற்போது ஆரம்ப தேர்ச்சி பெற்ற மற்றும் பகுதித் தேர்ச்சி பெற்ற பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் வயதெல்லை கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது ;

(vi) விண்ணப்பதாரிகள் தண்டனைக்குரிய சட்டப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது ;

(vii) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையில் உள்ளவராயின் அவர் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 5 வருடங்களுள் ஏதேனும் குற்றங்களுக்குட்படாமலும் 5 வருடங்களினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **சேர்த்துக்கொள்ளப்படும் முறை.**- இந்த பதவிக்காக முறையான நேர்முகப் பரீட்சை மூலம் மற்றும் எழுத்து மூலப் பரீட்சையின் மூலம் தகுதியாயின் மாத்திரம் உரிய பதவிக்காக சேர்த்துக்கொள்ளப்படும்.

4. **சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான நிபந்தனைகள்:**

(i) இந்த பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் கொண்டது. விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதி செலுத்தல் வேண்டும் ;

(ii) பதவி 3 வருடகால தகுதிகாண் நிலைக்கு உட்பட்டது ;

(iii) இந்த ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக அரச நிர்வாக ஒப்பந்தங்களுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் உரிய அதிகார சட்டம்/சட்டங்களுக்கு உடன்படிக்கைகளுக்கும், பொல்கஹவெல பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட கூற்றுகளுக்கு ஒத்ததாக நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படல் வேண்டும்.

5. ஆரம்ப தகுதிகள் அனைத்தையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பு விடுக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை**.- எல்லா விண்ணப்பதாரிகளும் இங்கு கீழ் உள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரப்படி விண்ணப்பப்படிவம் 2016.07.17 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக ‘செயலாளர், பிரதேச சபை, பொல்கஹவெல’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் மேல் பக்கத்தில் ‘.............................பதவிக்கான விண்ணப்பம்’ என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

தற்போது அரச/மாகாண சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களின் விண்ணப்பப்படிவத்தை தமது நிறுவனத் தலைவரூடாக அனுப்ப வேண்டியதுடன் உரிய திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் அல்லது ஏற்றுக்கொள்ளும் போது அல்லது இந்த சேர்த்துக்கொள்ளல் காலந்தாழ்த்தல் அல்லது வேறுபடுத்தல் அல்லது இந்த அறிவித்தல் தள்ளுபடி செய்தல் அல்லது திருத்தல் என்பவற்றிற்கு பூரண அதிகாரம் பொல்கஹவெல பிரதேச சபை செயலாளரின் முடிவாகும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(4) மிக அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் 02 ; (ஒன்று கிராம அலுவலரது சான்றிதழ் ஆதல் வேண்டும்)

ஜே. எம். நிமல் ஜயசிங்ஹ,
செயலாளர்,
பொல்கஹவெல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பொல்கஹவெல,
2016, மே 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பொல்கஹவெல பிரதேச சபை**

வடமேல் மாகாண சபை அரச சேவையில் பொல்கஹவெல பிரதேச சபையின் பதவிக்காக ஆட்சேர்ப்பு - 2016

....................................................................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன்:-----.
 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.

2. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

3. நிரந்தர முகவரி :-----.

4. பொல்கஹவெல பிரதேச சபை அதிகாரப்பிரிவினுள் இருப்பிட காலம் :-----.

5. பிறந்த திகதி :-

 ஆண்டு :----, மாதம் :----, திகதி :-----.

6. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது :-----.

 வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :-----.

7. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :-----.

8. ஆண்/பெண் :-----.

9. திருமணமானவர்/திருமணமாகாதவர் பற்றி :-----.

10. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவு முறையிலா? :-----.

11. கல்வித்தகைமை (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :-----.
(சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைக்கவும்)

12. தொழிற் தகைமை:-----.
(சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைக்கவும்)

13. சேவை அனுபவம் :-----.

14. உங்களுக்கு நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? :-----.

15. தற்போது பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அது பற்றிய விபரம் -
அந்த பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த) :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்று உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் நிறுவக தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியாகிய ....................................................... திரு./திருமதி/ செல்வி தற்போது இந்த நிறுவகத்தில் ............................... ஆக சேவை செய்கின்றார். அவர் எந்த விதத்திலும் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 5 வருட காலத்தினுள் எவ்வித தண்டனைக்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உள்ளாகவில்லை என்றும் அந்த 5 வருடத்தினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றுள்ளார் என்று இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்பத்திரம் சிபாரிசு செய்து முன்வைக்கின்றேன்/ முன்வைக்கவில்லை. அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

......................................................,
திணைக்கள/நிறுவன அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம் :-----.
திகதி :-----.

*6-723*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பிற்றபெத்தர பிரதேச சபை

அங்கீகரிக்கப்பட்ட துணைவிதியை ஏற்றுக் கொள்ளல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைச் (நியதி சட்டத்தின்) 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) அத்தியாயத்தினால் வாசிக்கப்பட்டதும் 261 ஆம் அதிகாரமாகிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாண சபையின் உள்ளூராட்சி நிர்மாணத்துறை பொறுப்பமைச்சாரால் அமைக்கப்பட்டதும், 2013.10.25 ஆந் திகதிய 1834 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், தென் மாகாண சபையினால் அனுமதித்துள்ளதாக 2014.10.17 ஆம் திகதிய இலக்கம் 1884/61 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசரிக்கப்பட்டதும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான துணைவிதி மற்றும் நுளம்புகள், நோய் பரப்பும் கிருமிகள் போன்றவற்றை அழிப்பது தொடர்பான துணைவிதியை தென் மாகாண சபையினால் 2014.08.12 ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் உறுதி செய்து 2016.04.22 ஆந் திகதிய பிற்றபெத்தர பிரதேச சபையின் தீர்மான இலக்கம் 89 இன் கீழ் ஏற்றுக் கொண்டு வர்த்மானியில் பிரசுரித்த திகதியிலிருந்த செற்படுத்த தீர்மானித்ததென பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

*முதலிகே ஜினதாஸ,*
*செயலாளர்,*
*பிற்றபெத்தர பிரதேச சபை*

*பிரதேச சபை,*
*பிற்றபெத்தர,*
*2016, ஏப்பிறல் 22.*

*6-682*

---

## பெலியத்த பிரதேச சபை

நிறைவேற்றுத் துணைவிதி

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (வகிபாக விதிமுறைகள்) சட்டவாக்கின் 2 வது பிரிவின் (1)வது உப பிரிவின் (அ) பந்தியோடு மொழியப்படுகின்ற 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபை (நிறைவேற்றுத்துணை விதிகள்) சட்டத்தின் 2 வது பிரிவின் (1)வது உப பிரிவின் கீழ் தென் மாகாண, மாகாண சபை உள்ளூராட்சி நிறுவன விடயதான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அவரினால் தயார்படுத்தப்பட்டதும் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் 1834 ஆம் இலக்கத்தையும் 2013.10.25 திகதி கொண்ட வர்த்தமானியின் IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும் தென்மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 1884/61 வது இலக்க 2014, ஒற்றோபர். 17 ஆந் திகதி கொண்ட வர்த்தமானியில் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான தென்மாகாண பிரதேசசபை அதிகாரப் பிரதேசத்தினுள் திண்மக்கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பான நிறைவேற்றுத் துணை விதி மற்றும் நுளம்பு உட்பட நோய்தொற்றுக் கிருமிகள் அழித்தொழித்திடல் தொடர்பான நிறைவேற்றுத் துணை விதி மேற்குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகள் (நிறை வேற்றுத்துணை விதிகள்) சட்டவாக்கின் 2வது பிரிவின்(3)ம் உப பிரிவின் சட்டதிட்டங்களுக்கு அமைய ஏற்றிடவும் மேற்படி அறிவித்தலானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து குறித்த சட்டதிட்டங்களை பெலிஅத்த பிரதேசசபை அதிகாரப் பிரதேசத்தினுள் செயலேற்றிடவும் நிதி மற்றும் கொள்கை வகுத்திடல் குழுக்கூட்டத்தின் 2016.04.26 ஆந் திகதி இலக்கம் 06 வது சிபாரிசின் கீழ் தீர்மானிக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப் படுகின்றது*

*கே. எச். அபேநாயக்க*
*செயலாளர்,*
*பெலியத்த பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*பெலியத்த,*
*2016, யூன் 1.*

*6-683*

---

## இமதுவ பிரதேச சபை

அங்கீகரிக்கப்பட்ட உப யாப்புகள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண (நேர் எதிர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 வதுபிரிவின் (1) வது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 261வது அதிகாரமாகிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்புகள்) சட்டத்தின் 2வதுபிரிவின் (1)வது உப பிரிவினகீழ், தென் மாகாணத்தில் மாகாணசபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, அவரால் தயாரிக்கப்பட்டதும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1834 உம் 2013.10.25 ஆந் திகதியுமுடைய வர்த்தமானிப்*

பத்திரிகையில் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும், தென் மாகாணத்தில் மாகாண சபை மூலம் அனுமதிக்கப்பட்டு அதுபற்றி இலக்கம்1884/61உம் 2014.10.17ந் திகதியுமுடைய வர்த்தமானிப் பத்திரிகையில் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான தென் மாகாணத்தில் பிரதேசசபைகளின் அதிகாரப் பிரிவுகளுக்குள் திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றியநகலின் உப யாப்புகளும், நுளம்புகளையும் நோய்களை ஏற்படுத்தும் கிருமிகளையும் ஒழிப்பது பற்றிய நகலின் உப யாப்புகளும் மேலேகுறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட உப யாப்புகள்) சட்டத்தின் 2வதுபிரிவின் (3)வது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக் கொள்வதற்கு உரிய ஏற்பாடுகள் இமதுவ பிரதேச சபையின் அதிகாரப் பிரிவிற்குள் நடைமுறைப்படுத் தற்கும் 2016.04.25 ந் திகதியின் தீர்வு இல. 2 இன் கீழ் முடிவுசெய்யப்பட்டது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

சீ. எச். முதலிகே,
செயலாளர்,
இமதுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
இமதுவ,
2016, ஏப்பிறல் 25.

6-824

---

### பஸ்கொட பிரதேச சபை

மேலதிக துணைவிதி

**1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணை விதி) கட்டளைச் சட்டம் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவில் வாசிக்கப்பட்டதும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தென் மாகாண, மாகாண சபை உள்ளூராட்சி விடயப் பொறுப்பமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி அவர்களினால் தயாரிக்கப்பட்டதும் 2013.10.25. ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தின் இலக்கம் 1834 இன் கீழ் விளம்பரம் செய்யப்பட்ட மேலதிக துணை விதி, தொடர்பாக-

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டதிதன் 122 ஆம் பிரின்படி வாசிக்கப்பட்டதும் அப்பிரிவின் 93 ஆம் பிரிவு மற்றும் 126 ஆம் பிரிவின் 9 ஆம் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) அத்தியாயங்களில் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பாக துணைவிதிகளை விதிப்பதற்காக பிரதேச சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள தோடு, 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் படி, இந்த அங்கீகரிக்கப்பட்ட மேலதிக துணை விதியை ஏற்றுக் கொண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து செயற்படுத்தப்பட வென 2016.03.28 ஆம் திகதிய தீர்மான இலக்கம் 312 இன் கீழ் அறிவித்தல் விடுக்கின்றேன்.

எல். இந்ரா பிரேமலத்தா,
செயலாளர்,
பஸ்கொட பிரதேச சபை,

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2016, மாச்சு 30.

6-825/1

---

### பஸ்கொட பிரதேச சபை

மேலதிக துணைவிதி

**பிரதேச சபையின் வலுப்பிரதேசத்தினுள் நுளம்புகள் மற்றும் நோய்க் காரணிக் கிருமிகள் தொடர்பான துணை விதிகளை விதிப்பதற்காக**

1989 ஆம் ஆணிடின் 12 ஆம் இலக்க மாகாண சபை (நியதிச் சட்டத்தின்) 2 ஆம் பிரிவின் வாசிக்கப்பட்டதும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தென் மாகாண உள்ளூராட்சி நிர்மாணத்துறை பொறுப்பமைச்சரால் அமைக்கப்பட்டதும், 2013.10.25 ஆம் திகதிய 1834 இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், அங்கீகரிக்கப்பட்ட மேலதிக துணைவிதி தொடர்பாக-

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின்

*126 ஆம் பிரிவின் (IX) ஆம் உப பிரிவின் (ஆ) இற்கு நுளம்புகள் மற்றும் நோய்க் காரணிக் கிருமிகள் தொடர்பாக துணைவிதிகளை விதிப்பதற்காக பிரதேச சபைகளுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளதோடு, 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் படி, இந்த அங்கீகரிக்கப்பட்ட மேலதிக துணை விதியை ஏற்றுக் கொண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து செயற்படுத்தப்படவென 2016.03.28 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 312 இன் கீழ் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

எல். இந்ரா பிரேமலத்தா,
செயலாளர்,
பஸ்கொட பிரதேச சபை,

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
*2016, மாச்சு 30.*

*6-825/2*

---

## கம்புறுபிட்டிய பிரதேச சபை

அங்கீகரிக்கப்பட்டமேலதிக துணை விதியை ஏற்றுக் கொள்ளல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைச் (நியதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) அத்தியாயத்தினால் வாசிக்கப்பட்டதும் 261 ஆம் அதிகாரமாகிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தெண் மாகாண சபை உள்ளூராட்சி நிர்மாணத்துறை பொறுப்பமைச்சரால் அமைக்கப் பட்டதும், 2013.10.25 ஆந் திகதிய 1834 ஆம் இலக்க வர்த்தமானியில் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும், தென் மாகாண சபையின் வலுப் பிரதேசத்தினுள் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பாக துணைவிதியை மற்றும் நுளம்புகள் நோய்க் காரணிகள் என்பவற்றை அழித்தல் தொடர்பான துணைவிதியை தென் மாகாண சபையினால் 2014.08.12 ஆம் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் அனுமதித்துள்ளதாக 2014.10.17 ஆம் திகதிய இலக்கம் 1884/61 ஆம் இலக்கம் கொண்ட IV (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.16 ஆம் திகதிய கம்புறுபிட்டிய பிரதேச சபையின் தீர்மான புத்தக இலக்கம் 64 இன் கீழ் ஏற்றுக் கொண்டு வர்த்தமானியில் பிரசுரித்த திகதியிலிருந்து செயற்படுத்தவென பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத் தருகின்றேன்.*

விமலா அபேகோன்,
செயலாளர்,
கம்புறுபிட்டிய பிரதேச சபை.

*6-923*